**இந்தியவானிலைத் துறை &தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை– 06.10.2021**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்குமண்டலம்**

மேற்குமண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டமான வானிலையுடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 55 முதல் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் மேற்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் தானியங்கள் மற்றும் சிறு தானியங்கள் அறுவடையை தள்ளி போட வேண்டும். மருந்து தெளிப்பதையும் நீர்பாய்ச்சுவதையும் ஒத்திவைக்க வேண்டும்.
- மானாவாரி விதைப்பில் 20 அடி இடைவெளியில் சரிவுக்கு குறுக்காக குறு வரப்பு அமைத்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்க வேண்டும்.
- தற்போது பெய்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மானாவாரி நிலங்களில் விதைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் வேலையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.
- காற்றின் வேகம் மணிக்கு 8 - 15 கிமீ அளவில் காணப்படுவதால் கரும்பு மற்றும் வாழைக்கு போதிய முட்டு கொடுக்க வேண்டும்.
- சம்பா பருவ விதைப்பு முடியும் தருணமாதலால், குறுகிய கால நெல் இரகங்களின் முளைத்த விதைகளை சேற்று உழவு செய்த நெல் வயலில் விதைக்க வேண்டும்..
- தற்போது நடவு செய்துள்ள சம்பா நெற்பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரி கரிசல் நிலங்களில் சிறு குறு தானியங்களை முன்பருவ விதைப்பு செய்ய வேண்டும்.

- இறவையில் விதைக்கப்பட்ட பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் மண்ணிலுள்ள அதிக ஈரத்தன்மையால் கிளைகள் வளரவாய்ப்புள்ளது. கிளைகளை வெட்டிவிட வேண்டும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் நிலக்கடலை பயிரை அறுவடை செய்து உலர் கருவி மூலம் காயவைக்க வேண்டும்..
- மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரித்து விட்டம் கட்டுதல் வேண்டும்.
- பருத்தியில் செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த 15 வது இடைக்கணுவுக்கு மேல் உள்ள பகுதியை கிள்ளி விட வேண்டும்.
- தொடர்ந்து மழை பெய்வதால் பருத்தியில் துத்தநாகசத்து குறைபாடு காணப்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த மழையில்லாத நாட்களில் 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட்டை 45 நாட்களான பருத்தியில் தெளிக்க வேண்டும்.
- தொடர் மழையால் பருத்தியில் பூ அல்லது பூ மொட்டுகள் உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மில்லி கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
- எதிர் பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி தக்காளியில் பாடுவாசி செய்யவேண்டும்.
- திராட்சை பயிரில், அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் பூஞ்சாண நோய்க்கு சாதகமான வெப்பநிலை நிலவுவதால் அடிச்சாம்பல் நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்து 0.25 சதவீதத்தினை 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.
- மழையுடன் காற்றின் வேகம் 15 கிமீக்கு மேல் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும்.
- எதிர் பார்க்கப்படும் தூறல் மழையினைப் பயன்படுத்தி தென்னை மரத்தினை சுற்றியுள்ள பாத்திகளை ஆழப்படுத்துவதன் மூலம் பருவகால மழை நீரினை வீணாகாமல் சேகரிக்க வேண்டும்.
- 120 நாட்கள் வயதான மஞ்சள் பயிரில் மேலுரமாக ஹெக்டருக்கு 55 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ பொட்டாஷ் இட வேண்டும்.
- வானம் அதிக மேகமூட்டத்துடனும், அதிக ஈரப்பதத்துடனும் காணப்படுவதால் மஞ்சளில் நுண்ணூட்டசத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இலை வழி உரமாக ஒரு ஏக்கருக்கு 150 கிராம் பெரஸ் சல்பேட், ஜிங்க் சல்பேட், போராக்ஸ் மற்றும் யூரியாவை 250 லிட்டர் நீரில் கலந்து 25 நாட்கள் இடைவெளியில் மழை இல்லாத நாட்களில் இருமுறை தெளிக்க வேண்டும்.
- ஒரு சில இடங்களில் தொடர்ந்து மழை காணப்படுவதால் மரவள்ளிக்கிழங்கில் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையால் வெளிரி காணப்படும். இதை நிவர்த்தி செய்ய ஒரு சத பெர்ரஸ் சல்பேட் உடன் 0.5 சத துத்தநாக சல்பேட் கலந்து தெளிக்க வேண்டும்.

- வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் ஜுலை மாதம் நடவு செய்யப்பட்ட இறவை மரவள்ளிக்கு மேலுரமாக எக்டருக்கு 45 கிலோ தழைசத்து மற்றும் 120 கிலோ சாம்பல் சத்து இட்டு மண் அணைக்க வேண்டும்.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடாரங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.. மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்க வேண்டும்.
- தற்போதைய வானிலை கறவை மாடுகளில் மடிவீக்க நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவ வேண்டும்.
- மழையால் முளைத்த புதிய புல்களை சாப்பிடுவதால் குடற்புழு நீக்குவதற்கு மருந்து கொடுக்க வேண்டும்.

**2.காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் நாட்களில் இலோசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது காலைநேர வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும் மாலை நேர வெப்பநிலை 24°செ முதல் 25°செ பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின்வேகம் 8 முதல் 10கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- காவேரி டெல்டா பகுதிகளில் வரும் நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.
- தற்போது நிலவும் தட்பவெப்ப நிலையின் காரணமாக இளம் பருத்தியில் பச்சை தத்துப்பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த தையோமீதாக்சைம் 25 WG 0.6 கிராம்/லிட்டர் அல்லது இமிடாகுளோர்பிரிட் 17.8 SL 0.6 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நடவு வயலில் இலைபேன் தாக்குதல் பரவலாக தென்படுவதால் இதனை கட்டுப்படுத்தஒரு ஏக்கருக்கு தையாமீத்தாக்சைம் 25 WG நனையும் தூள் 40 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வாழையில் குருத்து சுருட்டு அழுகல் நோயின் தாக்கம் தென்படுகிறது. எனவே இதனைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 75% WP @ 1.5 மருந்தினை 2.0 கிலோ /எக்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

- பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட வேண்டும்.

**3.தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செமுதல் 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 6 முதல் 20 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் மேற்கு திசையில் வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- பயிர்களுக்கு நீர்பாசனத்தை ஒத்திவைக்க வேண்டும்... இருப்பினும் மண் ஈரத்தினை பொருத்து நீர் பாய்ச்ச வேண்டும்.
- நெல் பயிரிடும் விவசாயிகள் கடந்த நாட்கள் கிடைத்த மழை கொண்டு பசுந்தாள் பயிர் விதையை விதைக்க வேண்டும்.
- நிலவும் வானிலையில் நெல்லில் இலைசுருட்டுப்புழு தென்படுகிறது. இந்த பூச்சியை கட்டுப்படுத்த அசார்டியாக்டின் 0.03% @ 1000 மி.லி/எக்டேர் அல்லது குளோரோரோடேரேனிலிபுருள் 18.5% SC @150கி / எக்டேர் அல்லது தையோமீத்தாக்சைம் 25% WG @150கி / எக்டேர் தெளிக்க வேண்டும்.
- நிலவும் வானிலையில் வளர்ச்சி பருவத்தில் பருத்தயிலி மாவுப்புச்சி தென்படுகிறது. இந்த பூச்சியை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் 2%, வேப்பங்கொட்டைச் சாறு 5% (அ) ப்ரோஃபெனோபாஸ் @ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- மானாவாரியில் பயிர்கள் வறட்சியை தாங்கி பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை எதிர்த்து வளரும் இரகங்களை தேர்வு செய்யவும். அவை பருத்தியில் கே.சி 3 (KC3), கே -12 (K12) மற்றும் எஸ்விபிஆர் 6 (SVPR6), மக்காச்சோளத்தில் கோ6 கலப்பினம் (COHM6), சோளத்தில் கே 8 (K8) மற்றும் கே 12 (K12), உளுந்தில் வம்பன் 6 மற்றும் 8 (Vamban 6,8), எம்டியு 1 (MDU1), பச்சைபயறில் கோ7 (CO7) மற்றும் கோ 8 (CO8) ஆகிய இரகங்கள் மானாவாரிக்கு உகந்தவை.
- மானாவாரி பயிர்களுக்கான பயிர்களை பூச்சி மற்றும் நோய் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க விதை நேர்த்திக்கு பின் விதைக்க வேண்டும்.. விதைக்குப்புக்கு 24 மணி நேரத்திற்க்கு முன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் பெவிஸ்டின் தடவி 24 மணி நேரத்திற்க்கு பின் உயிர் உரமான ரைசோபியம் 3 பாக்கெட் (பயர் வகைகளுக்கு). அசோஸ்பைரில்லம் 3 பாக்கெட் (தானியங்களுக்கு) மற்றும் 3 பாக்கெட் பாஸ்போபாக்டீரியாவுடன் அரிசி கஞ்சி கலந்து பின் விதைக்க வேண்டும்.

- மிளகாய் பயிர்களுக்கு பெறப்படும் மழையை பயன்படுத்தும் வகையில் விதைப்பதற்கு ஏதுவாக விதைகள் மற்றும் உரம் தயார் நிலையில் இருக்க வேண்டும். பூச்சி மற்றும் நோய்களில் இருந்து நாற்றுங்களை பாதுகாக்க வேப்பம் புண்ணாக்கை பயன்படுத்த வேண்டும்.
- மழை பொழிவு பொறுத்து நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். மற்றும் விதைகள் பாதிக்காதவாறு தென்னை கீத்து போர்வை போட வேண்டும்.
- ***சோள விதையை 2%*** பொட்டாசியம் டைஹைட்ரஜன் பாஸ்பேட் (அல்லது) **2%** பொட்டாசியம் குளோரைட்டியில் 16 மணி நோரத்திற்க்கு ஊறவைத்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.
- ***பருத்தி விதையை 2%*** பொட்டாசியம் குளோரைட்டியில் 10 மணி நோரத்திற்க்கு ஊறவைத்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.
- (2% - 1000 மல்லி தண்ணீரில் 20 கிராம் உப்பைக் கரைக்கவும். 1 கிலோ விதைகளை 650 மில்லி கரைசலில் ஊறவைத்து அசல் ஈரப்பதத்திற்கு மீண்டும் உலர வைக்கவும்).
- உளுந்து மற்றும் பச்சை பயறுக்கு 100 பிபிஎம் துத்தநாக சல்போட், 100 பிபிஎம் மாங்கனீஸ் சல்பேட் 3 மணி நோரத்திற்க்கு ஊறவைத்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். (1000 மில்லி தண்ணீரில் 1000 மில்லி கிராம் உப்பைக் கரைக்கவும். 1 கிலோ விதைகளை 350 மில்லி கரைசலில் ஊறவைத்து அசல் ஈரப்பதத்திற்கு மீண்டும் உலர வைக்கவும்).
- காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரத்திற்க்கு முட்டு கொடுக்க வேண்டும்..

**தெற்குமண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 30°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது 22°செ முதல் 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 8 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவும் வானிலையால் நிலக்கடலைப்பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்கம் பரவலாக தென்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 25 மில்லி என்ற அளவில் அசாக்சிஸ்டிரோபின் 10 மில்லி ஒட்டும் பசை சேர்த்து கலந்து இலைகள் நன்கு நனையும் படி கை தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் மக்காச்சோளத்தில் விதைப்புக்கு தயாராகும் விவசாயிகள் மக்காச்சோள சாகுபடியில் விதை நேர்த்தி செய்து விதைப்பது நல்ல பலனைத் தரும். நல்ல தரமுடைய விதைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு எக்டருக்கு விதைப்பதற்கு 20 கிலோ ஒட்டு இரக விதைகள் அல்லது 25 கிலோ இரக விதைகள் தேவைப்படும். ஒரு செடிக்கு மற்றோர் செடிக்கும் இடையே 20 செ.மீ இடைவெளியும் பாருக்கு பார் 45 செ.மீ இடைவெளியும் இருக்க

- .தற்போது நிலவும் பருவச் சூழ்நிலையால் மா பயிரில் சாம்பல் கருகல் நோய் தென்பட வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 250 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மற்றும் அசாக்சிஸ்டிரோபின் 10 மில்லி ஒட்டும் பசை சேர்த்து கலந்து தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் பருவச் சூழ்நிலையால் நெற்பயிரை தாக்கும் பாக்டீரியா வாடல் நோயைக் கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டை கரைசலை நோய் தோன்றும் முன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் இடைவெளியிலிலும் தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் பருவச் சூழ்நிலையால் வாழையில் கிழங்கு துளைக்கும் கூன் வண்டு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. 60- 100 கிராம் வேப்பங்கொட்டை பொடி அல்லது வேப்பம்புண்ணாக்கினை கிழங்குகள் நடும் போதும் பின்பு நான்கு மாதங்கள் கழித்தும் ஒரு முறையும் இடுவதால் இத்தாக்குதலைக கட்டுத்தலாம்.
- கால்நடைகளை மேய்ச்சலுக்கு சூரியன் உதித்த 2 மணி நேரத்திற்கு பின் அனுப்ப வேண்டும். மாட்டுக்கொட்டகையை சுற்றி கோணி சாக்கு பை கொண்டு மறைத்து கட்ட வேண்டும். கால்நடைகளுக்கு உலர்ந்த தீவனங்களையோ, பசுந்தீவனங்களையோ கொடுக்கும் போது ஈரப்பதம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 19°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 10°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 95 மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும், பதிவாக வாய்ப்புள்ளது சராசரியாக காற்றின்வேகம் மணிக்கு 6 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ஒரு சில இடங்களில் மிதமான முதல் கனமழை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது, வயலில் நல்ல வடிகால் வசதி ஏற்படுத்தவும் மற்றும் அறுவடை செய்த காய்கறிகளை மழையில் நனையாமல் சேமித்து வைக்க வேண்டும்.
- மலைக்காய்கறிப் பயிர்களில் வெட்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த, ஒளி பொறியை மாலை 7 மணி முதல் 10 மணி வரை உபயோகித்து தாய் அந்துப் பூச்சியை கட்டுப்படுத்த வேண்டும்.
- காற்றில் அதிக அளவு ஈரப்பதம் ஏற்படும் பொழுது பசுமைகுடிலில் வளரும் சாமந்தி பயிரில் வெள்ளை துரு நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே அதைக் கட்டுக்கடுத்த அசாக்சிஸ்டிரோபின் 1 மில்லி/லிட்டர் என்ற அளவில் கலந்து இலை வழி தெளிப்பாக தெளிக்க வேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் காபி, இரப்பர், கோகோ மற்றும் தென்னை பயிர்களில் ஊடுபயிராக காய்கறி, தட்டைபயிறு கோ-2 பயிரிடலாம்.

## 5. வட மேற்கு மண்டலம்

*வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை **30°செ** முதல் **33°செ** ஆகவும், இரவுநேர வெப்பநிலை **22°செ** முதல் **23°செ** ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் **95** சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் **50** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு **6** கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## வேளாண் அறிவுரை

- ➢ தொடர்ந்து மழை பெய்வதால் ஆமணக்கு பயிரில் குலை அழுகல் நோய் தென்படுகிறது. எனவே அவற்றை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற விதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு பூஞ்சாணக் கொல்லி மருந்தினை தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.
- ➢ ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்த வயலில் அமெரிக்கன் படைப்புழு தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த முதலில் அசாராக்டின் 10000 ppm என்ற பூச்சிக்கொல்லியை ஒரு லிட்டர் நீருக்கு 1 மில்லி என்ற விதம் கலந்து தெளிக்க வேண்டும்.. மறுபடியும் ஒரு வார இடைவெளியில் வெர்டிசீலியம் லக்கானி என்ற உயிர் பூஞ்சாணக் கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் நீருக்கு 6 கிராம் விதம் கலந்து தெளித்து படைப்புழுவை கட்டுப்படுத்த வேண்டும்..

<u>**கால்நடைகளில் நைட்ரேட் நச்சு**</u>

- ➢ நைட்ரேட் அதிகம் உள்ள தீவனப்பயிர்களை கால்நடைகள் உண்ணும் போது நைட்ரேட் நச்சு ஏற்படுகிறது. சூரிய வெளிச்சம் குறைவாக மேக மூட்டத்துடன் வானிலை நிலவும் போது சோளம், கம்பு மற்றும் ஓட்ஸ் போன்ற தீவனப் பயிர்களில் நைட்ரேட் அதிகம் சேருகிறது.
- ➢ இது தீவனப்பயிர்களுக்கு நைட்ரஜன் சத்து அதிகம் உள்ள எரு மற்றும் உரம் போன்றவற்றை இடும் போதும் நைட்ரேட் அளவு தீவனப்பயிர்களில் அதிகரிக்கிறது. தவிர குப்பைகுழி, சாக்கடை, கோழி பண்ணை கழிவுகள், அதிக அளவு யூரியா உரம் இடப்பட்ட வயல் பகுதிகளில் இருந்து மழைகாலங்களில் வழிந்து ஓடும் நீரில் நைட்ரேட் அளவு அதிகம் இருக்கும். இச்சமயத்தில் கழிவுநீர் கலந்த குளம், குட்டை வாய்க்கால் ஆகியவற்றில் மாடுகள் தண்ணீர் அருந்தும் போது நைட்ரேட் நச்சு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். எனவே சாக்கடை நீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் கொண்டு தீவன பயிர்கள் உற்பத்தி செய்வதை தவிர்க்க வேண்டும்.
- Ø செம்மறியாடுகளை விட கறவை மாடுகளில் நைட்ரேட் நச்சு பாதிப்பு அதிகம்.
- ➢ அதிக அளவில் நைட்ரேட் உட்கொள்வதால் மூச்சு விடுதலில் சிரமம் ஏற்பட்டு கால்நடைகள் இறக்க நேரிடும். நீண்ட நாட்களுக்கு மிதமான அளவில் நைட்ரேட் உட்கொள்வதால் கருசிதைவு உட்பட இனவிருத்தி திறன் பாதிக்கப்படும்

<u>**நைட்ரேட் நச்சை தடுக்கும் முறைகள்**</u>

- ➢ மேகமூட்டம் அதிகம் காணப்படும் மழை காலங்களில் தொழு உரம், மாட்டு கொட்டகை கழிவு நீர், யூரியா டி,ஏ,பி உரம் போன்றவைகளை தேவைக்கு அதிகமாக தீவனபயிர்களுக்கு இடுவதை தவிர்க்க வேண்டும்.
- Ø வேர் மற்றும் தண்டு பகுதிகளில் நைட்ரேட் அதிகம் காணப்படுவதால் தண்டு பகுதியை தீவனமாக அளிப்பதை தவிர்க்க வேண்டும்..

- ➢ ஒரே சமயத்தில் அதிக அளவு பசுந்தீவனத்தை அளிப்பதை விட பகுதிகளாக பிரித்து 3 - 4 முறை தீவனமாக அளிப்பது சிறந்தது.
- Ø கறவை மாடுகளுக்கு தேவையான அளவு கலப்பு தீவனம் அல்லது தானியங்கள், தாது உப்பு கலவை கொடுப்பதால் ஓரளவுக்கு நைட்ரேட் நச்சு தாக்கத்தை குறைக்கலாம்.

- மழைக்காலங்களில் அறுவடை செய்த பசுந்தீவனத்தை சிலமணி நேரங்களுக்கு வாட விட்ட பின் தீவனமாக அளிக்கலாம். இதே போல் நைட்ரேட் அதிகம் உள்ள கூடிநீரை திறந்த தொட்டி அல்லது பாத்திரத்தில் சேமித்து வைத்து இரண்டு நாட்களுக்கு பின் கால்நடைகளுக்கு வழங்குவதன் மூலம் நைட்ரேட் அளவு குறையும்.

## 6. வடகிழக்கு மண்டலம்

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை $26^0$செ முதல் $32^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது . காற்று மணிக்கு 8கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவிவரும் வானிலையால் கரும்பில் நுனிக்குருத்துப் புழுவின் தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த கார்போபியூரான் 3 சதவீதம் CG @ 66 கிலோ/ எக்டர் அல்லது குளோரான்ட்ரானிலிப்ரோல் 0.4 சதவீதம் SC@ 18.75 என்ற அளவில் இட வேண்டும்.
- தற்போது நிலவிவரும் வானிலையால் மக்காச்சோளத்தில் படைப்புழுவின் தாக்கம் தென்பட்டால் அதைக் கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 சதவீதம் SC @ 0.4 கிராம்/லிட்டர் அல்லது ஃப் ளூபென்டமைடு 20 WG 0.5 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- வெண்டையில் மஞ்சள் தேமல் நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த தையோமீத்தாக்சைம் 25%WG 2 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவேண்டும்.
- தற்போது நிலவும் வானிலையால் கொய்யா பழத்தில் ஈக்கள் பரவலாக தென்படுகிறது. ஈக்களை கவர்ந்து அழிக்க மெத்தில் யூஜீனால் கவர்ச்சிப் பொறியை ஒரு ஏக்கருக்கு 4 வீதம் வைக்கவும், அல்லது வேப்பஎண்ணெய் 3 சதவீதம் தெளிக்கவேண்டும்.
- தற்போது நிலவிவரும் வானிலையால் மஞ்சளில் ஏற்படும் வேர் தண்டுஅழுகல் நோயைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடியினை சுற்றி காப்பர் ஆக்ஸிகுளோரைடை 0.25 சதவீதம் கொண்டு நனைக்கவேண்டும்
- தற்போது நிலவி வரும் வானிலையால் மரவள்ளி கிழங்கில் மாவுப் பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த புளோனிகாமைடு 50சதவீதம் WG 60 கிராம்/லிட்டர் அல்லது தையோமீத்தாக்சைம் 25 WDG 40 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

- தென்னையில் காண்டமிருகவண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைத் தூளையும், மணலையும் 1:2 என்றவிகிதத்தில் கலந்து மரம் ஒன்றிற்கு 150 கிராம் வீதம் நடுக்குருத்தின் 3 மட்டை இடுக்குகளில் வைக்கவேண்டும்.

- உலர் தீவனம் மற்றும் அடர் தீவனங்களை தண்ணீர் புகாத சேமிப்பு கிடங்குகளில் பாதுகாத்து வைக்க வேண்டும். இது அப்ளாடாக்ஸின் மற்றும் பூஞ்சை காளான்கள் ஏற்படுவதை தடுக்கும்.
- கோழிகளை தாக்கும் நாடாப்புழுக்களின் இடைநிலை பருவங்களாக விளங்கும் தண்ணீர் மூலம் பரவும் என்பதால் கொட்டைகையை சுற்றியுள்ள மழை நீரைஅகற்றவேண்டும்.
- முட்டை இடும் கோழிகளுக்கு 5% கிளிஞ்சல் தூள் தீவனத்துடன் கலந்து கொடுத்தால் முட்டை தரமானதாக இருக்கும்.
- கால்நடை கொட்டடைகளில் ஈ மற்றும் கொசுதொல்லையை தடுக்க கொட்டைகையை சுற்றிலும் நொச்சி இலை புகை மூட்டம் போடவேண்டும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மற்றும் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை $30^0$செ முதல் $31^0$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை $23^0$செ முதல் $24^0$செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும் மாலைநேரக் காற்றின் ஈரப்பதம் 65சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மழை இருப்பதால், உரமிடுதல், பூச்சி மருந்து மற்றும் களைக்கொல்லி தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.
- தென்னை மரங்களுக்கு உரிய வடிகால் வசதி செய்ய வேண்டும். இல்லாவிடில் தொடர் மழையால் தென்னையின் வேரை பூஞ்சாண நோய் தாக்க வாய்ப்புள்ளது
- தற்போது நிலவும் வானிலையால் மலர்களில் மழை நீர் தேங்காத வண்ணம் நல்ல வடிகால் வசதி அமைக்க வேண்டும். அதோடு தொடர்ந்து மழை இருப்பதால் காலையில் மலர்களை அறுவடை செய்ய சிரமமாக இருப்பின் மாலை நேரங்களில் அறுவடை செய்யலாம்.
- அறுவடை செய்யப்பட்ட வாழை தார்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும். இதனால் மழையினால் ஏற்படும் நோய்களை தடுக்கலாம்.
- மழை இருப்பதால் இளம் இரப்பர், பழ மரங்கள் மற்றும் வாழை மரங்களில் நீர் தேங்காமல் நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**